**சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை**
**முன்னிலை : திரு. வ. இராமலிங்கம், பி.எஸ்.சி., பி.எல்.,**
**சார்பு நீதிபதி, அருப்புக்கோட்டை**

**2023 ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள் 27 ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**வ.வி.எண்.5/2022 இன் எம்.சி.ஓ.பி.எண்.64/2019**

தி. ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட்,
விருதுநகர் ... மனுதாரர்/4 ம் எதிர்மனுதாரர்

/எதிர்/

1. ஏ.உமாதேவி
2. மைனர்.ஏ.அஷ்டலட்சுமி
3. மைனர். ஏ. அர்ச்சனா
4. ஏ. ராஜம்மாள்
5. எம். அய்யாதுரை ... எதிர்மனுதாரர்கள்/ மனுதாரர்கள்

(மைனர் 2,3 எதிர்மனுதாரர்கள் தங்கள் அடுத்த சிநேகிதியும் பாதுகாப்பாளருமான தங்களது தாயார் 1 ம் எதிர்மனுதாரர்மூலம்)

இம்மனுவானது இந்நீதின்றம் முன்பாக இறுதியான விசாரணைக்காக 23.12.2022 அன்று வந்தபோது மனுதாரர்தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.அழகர்சாமி அவர்கள் ஆஜரானநிலையிலும் எதிர்மனுதாரர்கள்தரப்பில் வழக்கறிஞர் திரு.என் .கண்ணதாசன், திருமதி.எல்.ஹேமலதா அவர்கள் ஆஜரானநிலையிலும் இருதரப்பும் கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டும் இதுநாள்வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் மறுப்புரையை ஏற்றுக் கொள்ளக் கோரி கட்டளை 8 விதி 9 மற்றும் பிரிவு 151 சிபிசி படி மனுதாரர்களால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. மனுவின் சுருக்கம்:–

அசல் மனுவில் கண்ட விபத்து கடந்த 02.0.2019 ம் தேதி மதுரை – தூத்துக்குடி தேசிய நெடுஞ்சாலையில் வடக்கு திசையில் இருந்து தெற்கு திசையை நோக்கி ரோட்டின் வலதுபுறமாக சாலை விபத்தில் இறந்தவர் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது அவருக்கு எதிர்திசையில் வடக்கு பார்த்து டி.என்.67 ஏஇ 3808

என்ற பதிவெண் கொண்ட கார் நின்றுகொண்டிருந்தபோது அதேரோட்டில் தெற்கு திசையில் இருந்து வடக்கு திசையை நோக்கி வந்த டிஎன் 47 ஏடபிள்யு 5484 என்ற பதிவெண் கொண்ட ஆல்ட்டோ காரின் ஓட்டுநர் அதிவேகமாகவும் அஜாக்கிரதை யாகவும் கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து அங்கு நின்று கொண்டிருந்த டிஎன் 67 ஏஇ 3808 என்ற பதிவெண் கொண்ட காரின்மீது மோதி அதேவேகத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவர்மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது. மேற்படி விபத்து தொடர்பாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் ராஜசேகரன் என்பவர்மீதுதான் முதல் தகவல் அறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி விபத்து தொடர்பாக 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்(கனகராஜ்) மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை. எனவே 4ம் எதிர்மனுதாரர் மனுதாரர்களுக்கு எந்தவித இழப்பீடும் வழங்கக் கடமைப்பட்டவர் இல்லை. தங்களது நிறுவனம் தரப்பில் புலனாய்வு அறிக்கை வருவதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையில் 1ம் எதிர்மனுதார் வாகன ஓட்டுநர்மீது எந்த தவறும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளது. பின்பு புலனாய்வு அறிக்கை கிடைத்தபின்பு 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது மேற்படி விபத்து சம்பந்தமான எந்த தவறும் இல்லை என தற்போதுதான் தெரிய வந்தது. எனவே மேற்படி விடுபட்ட விசயங்களை ஏற்கனவே தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையில் சொல்ல விடுபட்டுவிட்டது. இது வேண்டுமென்றே ஏற்பட்டதல்ல. எனவே மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கூடுதல் மறுப்புரையை ஏற்றுக் கொள்ளவேண்டி மனுதாரரால் இம்மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர்தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையின் சுருக்கம்:–</u>

மனு சட்டப்படியும் சங்கதிகள்படியும் நிலைநிற்கத்தக்கதல்ல. அசல் மனுவில் 1ம் எதிர்மனுதாரரின் கணவரான அருணாச்சலம் சாலை விபத்தில் இறந்தது சம்பந்தமாக நஷ்டஈடு கோரி மனுதாரர்/2ம் எதிர்மனுதாரர் மற்றும் இதர எதிர்மனுதாரர்கள்மீது மனுத் தாக்கல் செய்த நிலையில் கடந்த 26.02.2021ம் தேதி அசல் மனுவின் மனுதாரர்/4ம் எதிர்மனுதாரர்தரப்பில் மறுப்புரை தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மறுப்புரையில் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தனது வண்டியை மெதுவாகவும் சாலை விதிகளை முறையாக பின்பற்றி ஓட்டி வந்தார் என்பதை அசல் மனுவின் 4ம் எதிர்மனுதாரர் தெள்ளத்தெளிவாக ஒப்புக் கொண்டுள்ளார். இந்நிலையில் மனுதாரர் தனது மனுவில்

3ம் எதிர்மனுதாரர் வாகனமானது சாலையில் நின்று கொண்டிருந்ததாகவும் பின்னால் வந்த 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தை ஓட்டி வந்த ஓட்டுநர் அஜாக்கிரதையாகவும் வேகமாகவும் ஓட்டிவந்து 3ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் பின்னால் மோதி விபத்து ஏற்பட்டதாகவும் மேற்படி விபத்து விபரமானது தங்களது புலனாய்வு அறிக்கை கிடைத்த பின்பு தெரிய வந்த நிலையில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதால் மேற்படி மறுப்புரையை ஏற்றுக் கொள்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப் பட்டுள்ளதாக சொல்வது ஏற்புடையதல்ல. மேலும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள மறுப்புரையில் சொல்லப்பட்டுள்ள விசயங்களை மாற்றி புதிதான விசயங்களை சொல்லி அதனை ஏற்றுக் கொள்வதற்கு இம்மனு தாக்கல் செய்வதற்கு சட்டப்படி ஏற்புடையதல்ல. எனவே இம்மனு தள்ளுபடி செய்யப்படவேண்டும்.

4. இம்மனுவில் தீர்க்கப்படவேண்டிய பிரச்சினை என்னவெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

5. <u>தீர்வு:–</u>

மனுதாரர்தரப்பில் விபத்து தொடர்பாக 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்மீதுதான் முதல் தகவலறிக்கை மற்றும் குற்ற இறுதி அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர் மீது எந்த வழக்கும் பதிவு செய்யப்படவில்லை என்றும் தங்கள் நிறுவனம் தரப்பில் புலனாய்வு அறிக்கை வருவதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்மீது எந்த தவறும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளதாகவும் பின்பு புலனாய்வு அறிக்கை கிடைத்தபின்பு 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்மீது விபத்து சம்பந்தமாக எந்த தவறும் இல்லை என தற்போதுதான் தெரிய வந்ததாகவும் அதுசம்பந்தமாக மனுதாரர்தரப்பில் கூடுதல் மறுப்புரை தாக்கல் செய்யவேண்டியுள்ளதாகவும் எனவே இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

6. எதிர்மனுதாரர்கள்தரப்பில் மனுவில் கூறியுள்ள சங்கதிகள் சட்டப்படி ஏற்புடையதல்ல என்றும் ஏற்கனவே தாக்கல் செய்துள்ள மறுப்புரையில் சொல்லப் பட்டுள்ள விசயங்களை மாற்றி புதிதான விசயங்களை சொல்லி அதனை ஏற்றுக் கொள்வதற்கு தாக்கல் செய்துள்ள இம்மனு ஏற்புடையதல்ல என்றும் எனவே மனுத் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

7. இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்தரப்பில், தங்கள் நிறுவனம் தரப்பில் புலனாய்வு அறிக்கை வருவதற்கு முன்பு தாக்கல் செய்யப்பட்ட மறுப்புரையில் 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்மீது எந்த தவறும் இல்லை என்று சொல்லப்பட்டுள்ளதாகவும் பின்பு புலனாய்வு அறிக்கை கிடைத்தபின்பு 3ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநர்மீது விபத்து சம்பந்தமாக எந்த தவறும் இல்லை என தற்போதுதான் தெரிய வந்ததாகவும் கூறியுள்ள நிலையில் எதிர்மனுதாரர் தரப்பில் மனுதாரரின் மனுவினை மறுத்து மறுப்புரை தாக்கல் செய்திருந்தாலும் மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதால் தங்களுக்கு என்ன பாதிப்பு ஏற்படும் என்பது குறித்து எவ்வித கூற்றும் கூறவில்லை. மேலும் மனுதாரரின் மனுவினை மறுத்து எதிர்மனுதாரர்தரப்பில் வேறு கடுமையான ஆட்சேபணை எதுவும் தெரிவிக்கப்பட வில்லை. எனவே மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையைக் கருத்திற் கொண்டும் இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

8. முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, இத்திறந்த நீதிமன்றத்தில் இன்று 27.01.2023 ம் தேதி அவையறியப் பகரப்பட்டது.

V RAMALINGAM
Digitally signed by V RAMALINGAM
Date: 2023.01.27 18:15:37 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

<u>மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றவாணங்கள் :_</u> இல்லை
<u>எதிர்மனுதாரர்தரப்பு சாட்சிகள், சான்றாவணங்கள்:–</u> இல்லை

V RAMALINGAM
Digitally signed by V RAMALINGAM
Date: 2023.01.27 18:15:48 +0530

சார்பு நீதிபதி,
அருப்புக்கோட்டை.

சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை
வ.வி.எண்.5/22 இன்
எம்.சி.ஓ.பி.எண்.64/2019
உத்தரவு நாள் – 27.01.2023